

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.1.2025) ஆங்கில புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொது மக்களிடம் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் சிவகங்கை நகரில் அரசு விழாவில்பயனாளிகள் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ள சிவகங்கை அரசு மன்னர் துரைச்சிங்கம் கல்லூரி மைதானத்தை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவின்டோங்கரே உமேஷ், கோட்டாட்சியர் விஜயகுமார் , சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளார்கள்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 3542 தொழிலாளர்களுக்கு ரூ.1.42 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்! அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்பு!

தஞ்சாவூர் ஜன.2-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி., மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

உடலுழைப்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 17.03.1999 அன்று தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து 2006 முதல் 2011 வரை 15 தனி நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பதிவு மற்றும் புதுப்பித்தலின் போது வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 முதல் முத்தமிழ் அறிஞரால் முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 01.11.2008 முதல் மாவட்டங்கள் தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் எளிய முறையில் பதிவு செய்யவும், புதுப்பிக்கவும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு ஏதுவாக 15.09.2009 முதல் கணினிமயமாக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் அவர்களால் இணையதளம் வழி உணவு மற்றும் பொருட்கள் விநியோகிக்கும் தொழிலாளர்களுக்கென தனியே உருவாக்கப்பட்ட தமிழ்நாடு இணைய சார்ந்த கிக் தொழிலாளர்கள் நலவாரியத்தையும் சேர்த்து தற்போது 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தன் மூலம், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 70,560 உறுப்பினர்கள் 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்துள்ளனர். கடந்த 07.05.2021 முதல் 30.11.2024 வரை மட்டும் 49,699 தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ளனர்.

அதே போல், கடந்த 07.05.2021 முதல் 30.11.2024 வரை தமிழ்நாடு கட்டுமானத்தொழிலாளர்கள் நலவாரியத்தில் 14,896 நபர்களுக்கு ரூ.13,82,25,430/ (ரூபாய் பதிமூன்று கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) மதிப்பீட்டிலும், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் 20,746 நபர்களுக்கு ரூ.20,13,81,530/ (ரூபாய் இருபது கோடியே பதிமூன்று இலட்சத்து எண்பத்தொராயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்) மதிப்பீட்டிலும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் 2,003 நபர்களுக்கு ரூ. 1,41,02,060/ (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து இரண்டாயிரத்து அறுபது மட்டும்) மதிப்பீட்டிலும் என மொத்தம் 37,645 தொழிலாளர்களுக்கு ரூ.35,37,09,020/ (ரூபாய் முப்பத்தைந்து கோடியே முப்பத்தேழு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருபது மட்டும்) மதிப்பீட்டில் கல்வி, திருமணம், இயற்கை மரணம், விபத்து மரணம், பணியிடத்து விபத்து மரணம், கண்கண்ணாடி உதவித்தொகை, மகப்பேறு, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இன்று பதிவு பெற்ற 20 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்குவதற்கு மானியமாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.20,00,000/ (ரூபாய் இருபது இலட்சம்). பணியிடத்தில் விபத்து மரணமடைந்த 4 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் ஐந்து இலட்சம் வீதம் ரூ.20,00,000/ (ரூபாய் இருபது இலட்சம்) உட்பட கல்வி, திருமணம், விபத்து மரணம், இயற்கை மரணம், ஓய்வூதியம், கண்கண்ணாடி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் ரூ.1,42,00,950/ (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து தொள்ளாயிரத்து ஐம்பது) மதிப்பீட்டில் 3,542 தொழிலாளர்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தொழிலாளர் நலத்துறை போன்ற அனைத்து துறைகளின் நலத்திட்டங்களை பொது மக்கள் பெற்று பயனடையுமாறு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அம்மாபேட்டை, சாலியமங்கலம், பாபநாசம், கும்பகோணம் வழியாக சென்னை கிளாம்பாக்கம் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத்தினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் எஸ்.கே.முத்துசெல்வன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் கே.வீ.கலைசெல்வன், சுபாதிருநாவுக்கரசு, சுமதி கண்ணதாசன், திருப்பனந்தாள் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் கோ.க.அண்ணாதுரை, தொழிலாளர் உதவி ஆணையர் த.ஆனந்தன், கூடுதல் தொழிலாளர் ஆணையர்.திவ்யநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (31.12.2024) சென்னை, தேனாம்பேட்டை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் வருகின்ற ஜனவரி 2ஆம் தேதி முதல் நடைபெறவுள்ள மலர் கண்காட்சிக்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தகவல் தொழில்நுட்ப அணி

# நெல்லை மண்டல ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரை!

நெல்லை, ஜன.2-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோ சனைப்படி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி நெல்லை மண்டல ஆய்வுக் கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் பாளை அன்னை திருமண மண்டபத்தில் 31.12.24 அன்று நடைபெற்றது.இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய, பகுதி, பேரூர், நிர்வாகிகளுக்கான ஆய்வுக் கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் பாளை அன்னை திருமண மண்டபத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர். கோ.ராமகிருஷ்ணன், கிறிஸ்தவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தகவல் தொழில் நுட்ப அணி நெல்லை மண்டலம் பொறுப்பாளர் பொறுப்பாளர் மதுரை எஸ். பாலா வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்று நிர்வாகிளுக்கு பல்வேறு ஆலோசனை வழங்கி பேசியதாவது:-

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டப்பேரவை முன்னாள் தலைவருமான ஆவுடையப்பன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் இந்த கூட்டத்தில் ஐ.டி. விங் பற்றி கூறியது தான் எங்களுக்கு பெருமையாக உள்ளது. தி.மு.க. மிகப் பெரிய ஒரு மக்கள் இயக்கம்.

திராவிட மாடல் ஆட்சி நடத்தும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இயக்கத்தை பாதுகாத்து வருகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இருந்து வருகிறார்கள். சொந்தக் காசில் செலவு செய்து வளர்ந்த கட்சி தி.மு.க. தான்.

தமிழ் யுனிக்கோடு என்ற கணினிக்கான எழுத்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.முதன் முதலில் பள்ளிகளில் கணிப்பொறியை அறிமுகம் செய்தவரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான். கணினி என்பதை அனைவரும் அறிவதற்கு முன்பே கணினியும் அதன் பயன்பாடும் என்ற புத்தகத்தை உருவாக்கினார்.அந்த புத்தகம் இன்றளவும் புழக்கத்தில் உள்ளது. மிகப்பெரிய தொலைநோக்கு சிந்தனையோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார்கள். தமிழினமும் தி.மு.க.வும் சாதாரணமாக வந்தது அல்ல. இந்த இனத்தை வளர்த்தெடுத்த தி.மு.க. என்ற மாபெரும் மக்கள் இயக்கம் முற்காலத்திலேயே தொலைநோக்கோடு செயல்பட்டது. தமிழகத்தில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதி காரணமாக இப்போது தமிழகம் சிறப்பாக உள்ளது.டைடல் பார்க் என்ற மிகப்பெரிய அமைப்பை தமிழகத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். மிகப்பெரிய கட்டிடங்களாக கடற்கரை வழிச்சாலைகளில் கட்டப்பட்டது. எதற்கு என அனைவரும் பேசினார்கள். டைடல் பார்க்குகளை கொண்டுவந்த பின்னர் தான் மிகப்பெரிய தொழில் நுட்ப புரட்சி தமிழகத்தில் வந்தது.

அதனை அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள் முறையாக பராமரித்து அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல தவறிவிட்டனர். கடந்த 10 ஆண்டுகள் தொழில்நுட்ப துறையில் மிகப்பெரிய சரிவை தமிழகம் சந்தித்தது. அதனை கழக தலைவர் முதலமைச்சர் அவர்கள் சரி செய்து மீண்டும் தமிழகம் தொழில் நுட்ப வளர்ச்சியில் நம்பர் 1 மாநிலமாக மாற்றியுள்ளார்.எனது தந்தை பழைய காலங்களில் கட்சி நிகழ்வுக்கு சென்று வந்தால் எதிர்க்கட்சிகளுடன் சண்டையிடும் நிலையிருக்கும். பல நேரம் சட்டையில் ரத்தக்கரையோடு தான் எனது தந்தை வீட்டுக்கு வருவார். அந்தக் காலத்தில் ரத்தக் கரை இல்லாமல் அரசியல் செய்த தில்லை. அன்றைய தி.மு.க. வின் பாதை நெருப்பு பாதையாக இருந்தது. அனைத்தையும் எதிர்த்து வளர்ந்தது தான் திராவிட இயக்கம்.பல எதிர்ப்புகள்,பல தியாகங்கள், பல உயிரிழப்புகள், பல சொத்துக்களை எல்லாம் இழந்து தான் தி.மு.க. என்ற இயக்கம் வளர்க்கப்பட்டது. அன்று தொட்டு இன்று வரை பெண்களுக்கான முக்கியத்துவத்தை தொடர்ந்து கொடுப்பதுதான் திராவிட இயக்கம். தமிழகத்தை தவிர்த்து பிற மாநிலங்களில் ஆண்கள் என்ன வேலை செய்கிறார்கள் என கேட்பார்கள்.

ஆனால் தமிழகத்தில் மட்டும் தான் பெண்கள் எந்த நிறுவனத்தில் வேலை செய்கிறார் கள் என கேட்கிறார்கள்.இப்படிப்பட்ட அற்புதமாக வளர்ந்த நாடு தமிழகம். இதற்கு பின்னால் உள்ள நூறாண்டு திராவிட வரலாற்றை தெரியாமல் இப்போது வந்த இயக்கங்கள் கண்டதை எல்லாம் பேசி வருகிறார்கள். இந்த இயக்கத்தின் வரலாற்றை மறைப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். மாபெரும் மக்கள் இயக்கத்தில் நீங்கள் பணியாற்றி வருகிறீர்கள். தி.மு.க.

வை தவிர எந்த ஒரு இயக்கத்திற்கும் வரலாறு இல்லை. அவர்கள் பேசும் பொய் செய்திகள் முறியடிக்கும் பணியை தி.மு.க. ஐடி விங் செய்யும். சென்னையில் தகவல் தொழில் நுட்ப பூங்கா உருவாக்கப்பட்டு பல லட்சம் பேர் வேலை பார்க்கும் சூழலை ஏற்படுத்தியது தி.மு.க.தான் அதே போல் நெல்லை மாவட்டத்திலும் தகவல் தொழில் பூங்கா அமைக்கும் திட்டம் உள்ளது.இதன் மூலம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.தி.மு.க. ஆட்சியில் அதிகமான திட்டங்கள் செய்யப்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு ஒரு திட்டம் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். 2011 ஆம் ஆண்டு தி.மு.க. எதிர்க்கட்சியாக கூட இல்லை வெறும் ஒரு குழுவாக மட்டுமே இருந்தது.தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்க்கட்சியாகவும், ஆளுங்கட்சியாகவும் இல்லாமல் இருந்தாலும் கூட ஒரே ஆளாக இருந்து ஆளும் வர்க்கத்தை கேள்வி கேட்கும் திராணி அது தி.மு.க.வுக்கு தான் இருக்கும்.ஆளும் கட்சியாக தி.மு.க. இருக்கும் போது செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து மக்களுடன் மக்களாக பயணித்து வருகிறது.அரசிடம் நேரடியாக கேட்க முடியாவிட்டா லும் கூட வீட்டில் இருந்தே கேட்கும்படியான பிரம்மாண்ட திட்டமாக மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.10 ஆண்டு இருண்ட ஆட்சியை விட்டு வெளியே வந்துள்ளோம்.2026 இல் மீண்டும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் குரல் ஒலிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி ராஜா பேசினார்.

நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப ஆலோசகர் கோவி. லெனின், மாநிலத் துணைச் செயலாளர்கள் பாச பிரபு, சுரேஷ் செல்வராஜ், நவீன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன் பேச்சிபாண்டியன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன், கிரிஜா குமார்,ஒன்றிய செயலாளர் அன்பழகன்,துணை மேயர் ராஜ்,பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன், அன்டன் செல்லதுரை, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர்கள் எஸ்.பிரேம் ஆனந்த் (நெல்லை கிழக்கு) ஆர்.கிஃப்ட்சன் (தென்காசி வடக்கு) அழகு சுந்தரம் (தென்காசி தெற்கு) துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, பிரபா அருள் மணி, அலெக்ஸ், காதர் ஒலி உள்பட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட, தொகுதி, ஒன்றிய, பகுதி, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தகவல் தொழில்நுட்ப அணி மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சக்தி சீதா ராஜவர்மன் நன்றியுரையாற்றினார்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பாளை சாரா டக்கர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கலைஞரும் திராவிட நல் திருநாடு என்ற தலைப்பில் 250 பேர் கவிதை பாடும் நிகழ்வு தமிழ்நாடு கலை இலக்கிய படைப்பாளர் கூட்டியக்கமும், மத்திய மாவட்ட இலக்கிய அணி சார்பில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்று பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்,கிரிஜா குமார்,தமிழ்நாடு கலை இலக்கிய படைப்பாளர் கூட்டியக்க உறுப்பினர் ராம் கணேஷ், மகளிர் அணி நிர்வாகிகள் அனிதா ஜோதி பிரியா உள்பட பலர் உள்ளனர்.



கோவை தெப்பக்குள மண்டல பா.ஜ.க. இளைஞர் அணி தலைவர் என்.விஷ்ணு மற்றும் இளைஞர் அணி மண்டல செயலாளர் என்.நிதிஷ் ஆகியோர் ஏற்பாட்டில், பா.ஜ.க. கிளைத் தலைவர் பி.ஆண்டவர், மண்டல செயற்குழு உறுப்பினர்கள் . ஆகாஷ், ஸ்ரீ சக்தி, வார்டு பொறுப்பாளர் கிஷோர், மண்டல செயற்குழு உறுப்பினர் நிவேதா ஆகியோருடன், 75 க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பா.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதிக் கழகச் செயலாளர்கள் மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், வட்டக் கழகச் செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.